# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 16 திங்கட்கிழமை 30.06.2025 கதிர் 240



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel






## நெடுந்தீவு பிரதேச சபை தமிழரசுக் கட்சி வசம் தவிசாளராக சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவு

நெடுந்தீவு, ஜூன் 30

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவானார்.

நெடுந்தீவு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று நெடுந்தீவு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

7➤

# சிங்கள இனத்துக்கே அநீதி இழைப்பாம்!

## ஆனால் தமிழ்ப் பிரிவினைவாதிகளை மாத்திரமே ஐ.நா. ஆணையர் சந்தித்தாராம் என வீரசேகர உளறல்



கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் சிங்கள இனத்துக்கே அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது எனவும், தமிழ்ப் பிரிவினைவாதிகளை மட்டுமே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்துள்ளார் எனவும் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை விஜயம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடாக இருந்த போதிலும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கே அநீதி இழைக்கப்படுகின்றது.

7➤

## ஆரையம்பதியில் பஸ் மோதி 3 வயது ஆண் குழந்தை சாவு!



மட்டக்களப்பு, ஜூன் 30

மட்டக்களப்பு, ஆரையம்பதி - காளிகோவில் வீதியில் பஸ் மோதி 3 வயது ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

ஆடைத்தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்வதற்காக பஸ்ஸில் ஏற முற்பட்ட தாய்க்குப் பின்னால் சென்ற ஆண் குழந்தை மீதே பஸ் மோதியுள்ளது.

7➤

## ஷிராந்தி கைதாவதைத் தடுப்பதற்கு மகாநாயக்கரை நாடினாரா மஹிந்த?

### முற்றாக மறுக்கின்றார் சாகர



கொழும்பு, ஜூன் 30

ஷிராந்தி ராஜபக்ஷ கைது செய்யப்படுவதைத் தடுப்பதற்கு மகாநாயக்க தேரர்களின் உதவியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரினார் என வெளியாகும் தகவலை ஸ்ரீலங்கா பொதுஜன

7➤

## வவுனியா மாநகர சபையின் முதல் அமர்வு




வவுனியா, ஜூன் 30

வவுனியா மாநகர சபையின் முதலாவது அமர்வு செங்கோலுடன் நடைபெற்றது.

மாநகர சபை மண்டபத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அமர்வு நடைபெற்றது.

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# புத்தகங்களின் விலை அதிகரிப்பு

பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விதிக்கப்பட்டதால் அச்சிடப்பட்ட புத்தகத்தின் விலை 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கத்தின் வருடாந்திர ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர இந்தக் கருத்தை வெளியிட்டார். ஒரு புத்தகத்தின் விலை 20மூ அதாவது ஐந்தில் ஒரு பங்கு அதிகரித்துள்ளது. இது குறித்து அதிகாரிகள் குழம்பியுள்ளனர். முன்பு, எழுதுபொருள் உட்பட அனைத்திற்கும் ஏயுவு வரி விகிதம் 15மூ ஆக இருந்தது. ஆனால் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு ஏயுவு வரி இல்லை. அதற்குதான் நேரடியாக 0 - 18%ஆக அறவிடப்பட்டது. எழுதுபொருட்களுக்கு 3மூஆக மட்டுமே இருந்தது. அவர்கள் இந்த இரண்டு விடயங்களால் குழம்பிப் போயுள்ளனர். சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு, ஜனாதிபதி செயலகத்திலிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது, அதில் அவர்கள் ஏயுவு வரி தொடர்பாக சில விடயங்களை ஆராய்ந்து வருவதாகவும், பின்னர் ஒரு பதிலை வழங்குவதாகவும் தெரிவித்தனர். தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கத்தின் புரவலர் காமினி மொரகொடவும் இது குறித்து ஊடகங்களுக்கு தனது கருத்துக்களை தெரிவித்தார். உலகின் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு எங்கள் புத்தகங்களுக்கு ஏயுவு வரி அறவிடப்படுகிறது. இலங்கையில் 75 ஆண்டுகளாக நடைமுறையில் இல்லாத ஏயுவு வரி, ஜனவரி 2024 முதல் விதிக்கப்பட்டதால் புத்தக விற்பனை அழிவடைந்து வருகிறது. இது தொடருமாக இருந்தால் ஒரு பிள்ளைக்கு புத்தகம் கூட வாங்க முடியாது. (ஐ)

# மின்சார சபையின் முக்கிய அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

இந்த ஆண்டு ஜூன் மாதமளவில் இலங்கை மின்சார சபையானது 70 சதவீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை பூர்த்தி செய்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

1990ஆம் ஆண்டின் முற்பகுதிக்குப் பிறகு முதல்முறையாக, இலங்கை மின்சார சபையானது இந்த மாத நிலவரப்படி அதன் மொத்த மின்சார உற்பத்தியில் 70 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து பெற்றுள்ளது.

ஏனைய மாதங்களைவிட இந்த மாதம் தேவை அதிகமாக இருந்த நிலையிலும் இவ்வாறு பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மின்சார விநியோகம் சுமார் 100 சதவீதம் நீர் மின்சாரம் சார்ந்தது என்ற ஆரம்பக்கால கொள்கையிலிருந்தும், காலப்போக்கில் பின்பற்றப்பட்ட கலப்பின நீர் மின் - அனல் மின் கொள்கையிலிருந்தும் இது ஒரு விலகலைக் காட்டுவதாக மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது. புதுப்பிக்கத்தக்க மின்சார சதவீத்தை அதிகரிப்பதற்கான இலங்கை மின்சார சபையின் நிலையான திட்டத்தின் வெற்றியை இது பிரதிபலிப்பதாகவும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (ஐ)



# வத்தளையில் சிக்கிய 2 கோடி கேரள கஞ்சா!

கொழும்பு, ஜூன் 30

வத்தளை, பள்ளியவத்தையில் உள்ள ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 39 கிலோகிராம் கேரள கஞ்சாவை வத்தளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த சோதனை மேற்கொள்ளப்பட்டதோடு, மேலும் பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சோதனை நடத்தப்பட்ட நேரத்தில், விநியோகத்திற்கு தயார் நிலையில் போதைப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததோடு, சந்தேக நபர்கள் 6 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

களனி பிரதேச பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நுவன் அசங்க, களனி மாவட்ட பொறுப்பதிகாரி பிரசன்ன சில்வா ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில், வத்தளை தலைமை பொலிஸ் பரிசோதகர் அனுர குணவர்தன மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பிரியங்க உள்ளிட்ட குழுவினரால் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# காணி சுவீகரிப்பு வர்த்தமானி அறிவித்தல் ரத்து



வட மாகாணத்திலுள்ள உரிமை கோரப்படாத 5,941 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் வகையில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட காணி சுவீகரிப்பு தொடர்பான வர்த்தமானியை அறிவித்தலை ரத்து செய்வதாக நேற்று முன்தினம் வர்த்தமானி பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, முன்னைய வர்த்தமானி அறிவித்தல் அரசின்கொள்கை முடிவுக்கு அமைய, ரத்து செய்யப்படுவதாக புதிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காணிகள் உள்ள பகுதிகளில் நிலவும் குறிப்பிட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும், இந்தக் காணிகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரிமை கோருபவர்களுக்கு போதுமான வாய்ப்பை வழங்குவதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, 3 மாத அவகாசத்துடன், கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நடை முறைப்படுத்துவதற்கு எதிராக, நேற்று முன்தினம் உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவும் வழங்கியிருந்தது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவின் பிரகாரம் இந்த உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறான பின்னணியிலேயே குறித்த வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறும் புதிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் நள்ளிரவில் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யப்பட்டதை தாம் வரவேற்கின்றபோது, இந்த வர்த்தமானி அறிவித்தல் போதுமான கால அவகாசம் வழங்குவதாகக் கூறி ரத்து செய்யப்படுவதையிட்டு அதிருப்தி அடைவதாக, இலங்கைத் தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட சொகுசு வாகனங்கள் பறிமுதல்



கொழும்பு, ஜூன் 30

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதாக கூறப்படும், 3 கோடி ரூபாய் பெறுமதியுள்ள இரண்டு சொகுசு வாகனங்கள் களுத்துறை பண்டாரகம பகுதியில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாகனங்களும் பாணந்துறை வலான ஊழல் தடுப்பு பிரிவினரால் சோதனை செய்து மீட்கப்பட்டன.

மேல் மாகாண புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பண்டாரகம வீதாகம பகுதியில் உள்ள ஒரு வீட்டில் மறைத்து வைக்கப்பட்ட வேன் மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றொரு வாகனமும் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை, களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் அரசியல்வாதி ஒருவரின் நெருங்கிய உறவினருக்கு சொந்தமானதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட நபரை கைது செய்யும் பணியில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பண்டாரகம பகுதியில் கைப்பற்றப்பட்ட சொகுசு ஜீப் மற்றும் வேனில் தவறான பதிவு இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட வேனில் பயன்படுத்தப்பட்டிருந்த பதிவு இலக்கம், ஹொரணை மில்லனிய பகுதியிலுள்ள பாதுகாப்பு துறையில் பணிபுரியும் ஒருவரது சட்டப்பூர்வமான வாகனத்திற்கு சொந்தமானதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதேபோல், ஜீப்பில் இருந்த பதிவு இலக்கம் மோட்டார் வாகனத் திணைக்களத்தின் கணினி தரவுகளில் போலியாக மாற்றப்பட்டதாகவும், அதன்மூலம் சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

பாணந்துறை வலான ஊழல் தடுப்பு பிரிவு இந்த வாகனங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. (ஐ)

# மீன்பிடி படகுகள் விபத்து: ஆராய விசேட குழு

*கொழும்பு, ஜூன் 30*

*மீன்பிடி படகு விபத்துக்கள் தொடர்பான தொடர்ச்சியான சம்பவங்களை ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட விபத்துகளுக்கான காரணங்கள் மற்றும் அவற்றுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்து அவதானம் செலுத்தும் நோக்கில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*தங்காலை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பல நாள் மீன்பிடி படகு ஒன்று பாறையில் மோதி விபத்துக்குள்ளானதோடு, அதில் இருந்த நான்கு மீனவர்கள் டிங்கி படகின் உதவியுடன் தப்பியுள்ளனர்.*

*இருப்பினும், இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளதாகவும், அவர்களில் ஒருவரின் உடல் இன்று பிற்பகல் கண்டெடுக்கப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.*

*பேருவளை, மொரகல்ல பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீன்பிடி படகில் இருந்த இரண்டு மீனவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த நிலையில், அவர்களின் சடலங்கள் இன்று காலை பெந்தர கடற்கரையில் கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*உயிரிழந்தவர்கள் அளுத்கம களுவாமோதர பகுதியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் ஆவர்.*

*தெவிநுவர பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற "தினேஷ்-4" என்ற பல நாள் மீன்பிடி படகு வணிகக் கப்பலுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் காணாமல் போன மீனவரின் உடல் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கடற்படை தெரிவித்துள்ளது.*

*மீன்பிடிக் கப்பல் ஒரு வணிகக் கப்பலுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது, மேலும் அதில் இருந்த 6 மீனவர்களில் இருவர் மட்டுமே உயிர் பிழைத்தனர்.*

*நேற்று இரண்டு மீனவர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும், காணாமல் போன ஏனைய மீனவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.*

*கப்பலில் மோதி கவிழ்ந்த படகில் பல மணி நேரம் சிக்கிக் கொண்ட மீனவர் கடற்படையினரால் மீட்கப்பட்டு, தற்போது காலி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.*

*(ஐ)*



# உப்புக்கான விலை கலந்துரையாடல் நடை பெறவில்லை

உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்தி தவறானது என நுகர்வோர் விவகார அதிகாரசபை மறுத்துள்ளது.

அதிகபட்ச விலையை தீர்மானிக்கும் வகையில் உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் அதிகாரபூர்வ கலந்துரையாடல் எதுவும் நடைபெறவில்லை எனவும், ஆனால் ஆலோசனைப் பொருட்டு சுயாதீன நுகர்வோர் விவகார சபை சில சந்திப்புகளை மேற்கொண்டுள்ளதாகவும் அதிகாரசபை விளக்கியுள்ளது.

உப்பு விலை தொடர்பான ஊடகவியலாளர்கள் வெளியிட்ட செய்திகளில் உண்மையில்லை என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் இடம்பெற்ற ஆலோசனைச் சந்திப்பில் அதிகபட்ச சில்லறை விலை குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

எதிர்காலத்தில் அது தீர்மானிக்கப்பட்டால், அதிகாரசபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதற்கமைய விலை வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உப்பு தயாரிப்புகளின் மீது விலை குறிப்புகள் இல்லாமல் விற்பனை செய்யும் இறக்குமதியாளர், உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரசபை எச்சரித்துள்ளது

# ஆலையடிவேம்பும் தமிழரசு வசம்

அம்பாறை, ஜூன் 30

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு இன்று ஆலையடிவேம்பு பிரதேச சபையில் இடம்பெற்றது.

இதன்போது பகிரங்க வாக்கெடுப்பு ஊடாக இலங்கைத் தழிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஆர்.பிரரேமதாச தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும், உப தவிசாளராக அன்னாசி சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழுவின் தலைவரான தனம் சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகர் கணேசபிள்ளை ரகுபதி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# போதை கடத்தல் கும்பல் பிடியில் தமிழ் சினிமா




'தி.மு.க.,விடம் இருந்து தமிழக மக்களை காப்பாற்றும் வகையில் அ.தி.மு.க., - பா.ஜ., வலுவான கூட்டணியாக உள்ளது" என்று, ஹிந்து மக்கள் கட்சி நிறுவனர் அர்ஜுன் சம்பத் தெரிவித்தார்.

அவர் அளித்த பேட்டி: திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில், வரும் 27ம் தேதி, ஹிந்துக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சிவபக்தர்கள் மாநாடு, ஆப்பரேஷன் சிந்துார் வெற்றி என கட்சியின் முப்பெரும் விழா நடக்கிறது. திருச்செந்துார் கோவில் கும்பாபிஷேகத்தில், தமிழ் இல்லாமல் இல்லை. தேவாரம், திருவாசகம் பாட உள்ளனர். ஆகம விதிகள்படி தான் அங்கு கும்பாபிஷேகம் நடக்க வேண்டும்.

திருச்செந்துார் கோவிலுக்கு, சிவ நாடார், 280 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகளை செய்தார். ஆனால், தி.மு.க., அரசு, தங்களால் தான் நடப்பது போல், விளம்பரம் தேடுகிறது. கோவில் கும்பாபிஷேகங்களுக்கு தி.மு.க., அரசு நிதி ஒதுக்குவது கிடையாது. பக்தர்கள் தான் திருப்பணிகளை செய்கின்றனர். அரசு அனுமதி மட்டும் தான் கொடுக்கிறது.

கல்வித் துறையில், தி.மு.க., அரசு திராவிட கொள்கைகளை புகுத்துகிறது. ஹிந்துக்கள் நடத்தும் கல்வி நிலையம் ஒடுக்கப்படுகிறது. பள்ளி கல்வி துறையில், 60 சதவீதம் கிறிஸ்துவர்கள் ஆதிக்கம் உள்ளது. ஏராளமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, மதமாற்றம் செய்கின்றனர். பள்ளிக் கல்வித் துறையை கிறிஸ்துவர்கள், திராவிட இயக்கத்தின் பிடியில் இருந்து விடுவிக்க வேண்டும். ஏபோதைப்பொருள் பயன்படுத்தியதாக சினிமா பிரபலங்களை கைது செய்துள்ளனர். ஆனால், ஜாபர் சாதிக், அமீர் உள்ளிட்டோர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. சினிமா பிரபலங்கள் பங்கேற்கும் பார்ட்டிகளில் போதைப்பொருள் தாராளமாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால், எந்த நடவடிக்கையும் இல்லை. போதை மற்றும் கடத்தல் கும்பல் பிடியில் தமிழ் சினிமா துறை சிக்கி உள்ளது.

அ.தி.மு.க., - பா.ஜ., கூட்டணி வலுவான கூட்டணியாக உள்ளது. இதில், குழப்பத்தை ஏற்படுத்த, தி.மு.க.,வை சார்ந்தவர்கள் சதி வேலையில் ஈடுபடுகின்றனர். அதை முறியடிக்கும் வகையில், அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி, 234 தொகுதிகளிலும் மேற்கொள்ளும் சுற்றுப்பயணம் வெற்றியடைய, ஹிந்து மக்கள் கட்சி துணை நிற்கும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



## இனி தி.மு.க., வேண்டாம்': நயினார் நாகேந்திரன் கோஷம்

துாத்துக்குடி: சட்டசபை தேர்தலுக்காக, 'வேண்டாம் இனி தி.மு.க., வேண்டாம்' என்ற கோஷத்தை துவங்கி உள்ளதாக தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

அ.தி.மு.க.,வுக்கு பா.ஜ., கூடுதல் சுமை என கூறும் சீமான், சுமை இல்லாத கட்சி எது எனவும் விளக்கமாக கூறி இருக்க வேண்டும்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் உட்பட அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகிறேன். அ.தி.மு.க., பொதுச் செயலருடன் விஜய் பேசினாரா, இல்லையா என எனக்கு தெரியவில்லை.

தற்போது, 'வேண்டாம் இனி தி.மு.க., வேண்டாம்' என்ற ஒரு கோஷத்தை துவங்கி உள்ளேன். அதன்படி, அனைவரும் சிந்திக்க வேண்டும். சென்னையில், நட்சத்திர ஹோட்டல்களில் கோகைன் போன்ற போதைப்பொருட்கள் வழங்கப்படுவதாகவும், முக்கிய நடிகர்கள் போதைப்பொருள் பயன்படுத்துவதாகவும் பாடகி ஒருவர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் நல்லாட்சி நடக்கிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அதை கருத்தில் கொண்டு, இந்த கோஷத்தை தேர்தல் வரை எடுத்துச் செல்ல இருக்கிறோம்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, பா.ம.க., நிறுவனர் ராமதாஸை சந்தித்தது பற்றி யாரும் கேள்வி எழுப்பவில்லை. மதுரையில் முருகன் மாநாடாக விதைக்கப்பட்டது, 2026ல் ஆல மரமாக வளர்ந்து, நிழல் தரும் அரசாக அமையும்.

## கனமழையால் பள்ளி வளாகத்தில் சிக்கி தவித்த 162 மாணவர்கள் மீட்பு



ஜார்க்கண்டில் பெய்த கனமழையின் காரணமாக தனியார் பள்ளி வளாகத்தை மழைநீர் சூழ்ந்தது. இதன் காரணமாக, அங்கு சிக்கி தவித்த 162 மாணவர்களை உள்ளூர் மக்களின் உதவியுடன் போலீசார் பத்திரமாக மீட்டனர்.

ஜார்க்கண்டில் கிழக்கு சிங்பும் மாவட்டத்தின் பண்டர்சோலியில் தனியார் பள்ளி இயங்கி வருகிறது. இப்பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்ததால், பள்ளி வளாகத்தை நேற்று முன்தினம் மழைநீர் சூழ்ந்தது.

மழையின் தீவிரம் அதிகரித்ததால், பள்ளியின் கீழ்தளம் முழுதும் மூழ்கியது. பள்ளியில் இருந்த மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து, மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்கள் அனைவரையும் பள்ளி கட்டடத்தின் மேல்தளத்திற்கு ஆசிரியர்கள் அழைத்துச் சென்றனர்.

மொபைல்போன் பயன்படுத்த மாணவர்களுக்கு தடை பள்ளிகளில் அமல்படுத்த கல்வி துறை உத்தரவு

இதற்கிடையே பள்ளி வளாகத்தில், 162 மாணவர்கள் சிக்கி இருப்பதாக கிடைத்த தகவலின்படி போலீசார் அங்கு விரைந்தனர். மழையின் தீவிரம் அதிகரித்து காணப்பட்டதால், மாணவர்களை மீட்பதில் தொடர்ந்து சிரமம் ஏற்பட்டது. இதனால், மாணவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் இரவு முழுதும் பள்ளி வளாகத்திலேயே சிக்கி தவித்தனர்.

இதற்கிடையே, அவர்களை மீட்க, தேசிய பேரிடர் மீட்பு படையினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், அப்படையினர் வரும்முன், உள்ளூர் மக்களின் உதவியுடன் அனைத்து மாணவர்களையும் கயிறு கட்டி போலீசார் பத்திரமாக மீட்டனர்.

இந்நிலையில் ஜார்க்கண்டின் பல்வேறு மாவட்டங்களுக்கும் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கான எச்சரிக்கையை வானிலை மையம் விடுத்துள்ளது. (ஐ)

## உத்தராகண்டில் மேக வெடிப்பு இருவர் பலி 7 பேர் மாயம்

உத்தராகண்டில், மேக வெடிப்பு காரணமாக பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, இரண்டு தொழிலாளர்கள் உயிர் இழந்தனர். மாயமான ஏழு பேரை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

உத்தராகண்டில் உத்தரகாசி மாவட்டத்தின் பாலிகட் என்ற பகுதியில், நம் அண்டை நாடான நேபாளத்தைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், தற்காலிக கூடாரம் அமைத்து கட்டுமானப் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று, உத்தரகாசி மாவட்டத்தில் திடீரென மேக வெடிப்பு காரணமாக பலத்த மழை கொட்டியது. அப்போது, பாலிகட் பகுதியில் உள்ள சிலாய் வளைவில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், நேபாள தொழிலாளர்கள் தங்கியிருந்த கூடாரம் அடித்துச் செல்லப்பட்டது. 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்ட நிலையில், ஒன்பது பேர் நிலச்சரிவில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இதில் இருவரது உடல்கள், நிலச்சரிவு ஏற்பட்ட இடத்திலிருந்து 18 கி.மீ., தொலைவில் உள்ள திலாடி ஷாஹீத் ஸ்மாரக் அருகே யமுனை நதிக்கரையில் கண்டெடுக்கப்பட்டன. மாயமான ஏழு பேரை தேடும் பணியில் பேரிடர் மீட்புப் படையினர் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

ஹிமாச்சல பிரதேசத்தில் பெய்த கனமழையின் காரணமாக ஆங்காங்கே நிலச்சரிவு ஏற்பட்டது. பல்வேறு இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன் இதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பாதிப்புக்குள்ளானது. சுற்றுலா பயணியர் பலர், நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால், அவ்வழித்தடத்தில் இயக்கப்பட்ட ரயில்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடுவழியில் நிறுத்தப்பட்டதால், பயணியர் கடும் பாதிப்புக்குள்ளாகினர். (ஐ)

# உழைப்பே உயர்வு



"உழைப்பே உயர்வு" என்ற தலைப்பில் போட்டிக் கட்டுரை எழுத நினைத்தபோது ஏன் நான் எழுதிய உழவு குறித்த குறள்வெண்பாக்களின் கருத்துகளையே கட்டுரையாக்கக் கூடாது என்ற எண்ணம் வந்தது. காரணம் உழவுத்தொழிலை விட உயர்வான தொழில் வேறில்லை என்பதால் அந்த குறள் விளக்கங்களையே புதுமையாக கட்டுரையாக்கி இருக்கிறேன். ஏனெனில் இது என் தொழில். செய்யும் தொழிலே தெய்வம். இனி குறளும் அந்த குறளுக்கு விளக்கம் சொல்லும் விளக்க கருத்தும் இங்கே

நாறுது காற்றதென் றெண்ணி தொலைபோவோர்
மண்வா சமறியா தார்

தண்ணீர் பற்றாக்குறை சமயங்களிலும், ஒரு சில இக்கட்டான சமயங்களிலும் வயலில் இருக்கும் பயிர்களோடு நாள் கணக்கில் தண்ணீர் தேங்கியிருந்தால் மற்றவர்கள் முகம் சுளிக்கும் ஒரு வாசனை வீசும். "இது என்ன இப்படிநாறுகிறது" என்று எண்ணி வயல் பக்கம் வராமல், வேறு வழியாகப் போவோர்கள் மண்ணின் மணத்தையும், அதன் வாழ்வையும் அதாவது எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு நல்லதே செய்வதோடு, தான் துர்நாற்றம் வீசினாலும் பரவாயில்லை என்று அது தண்ணீரை தேக்கி வைத்து பயிருக்கு தரும் அதன் வாழ்வையும் அறியாதவர்கள்)

சேற்று யிராயெனை கண்பார்த்த காலன்
அவனெ கயிறை கைமறந்தான் காண்






எனது உயிரைப் பறிக்க வந்த எமதர்மர், சேற்றில் உழன்று வேலை செய்யும் என்னை, விவசாயத்தின் உயிராகவே நினைத்துப் பார்த்து, தான் வீச வந்த இறப்புக்கயிறை என் மீது வீச கைமறந்து, அதை தூர எறிந்து விட்டு, அதே கையாலேயே இங்கு (வயல்வெளியில்) எனக்கு உதவி செய்வார்

வானக்கதிரளக்கு மெங்கள் பொழுது
புலரும் மழைவரும் நாள்

வானத்திலிருந்து வரும் சூரியனின் கதிர்களைப் பார்த்து பொழுதை தெரிந்துகொள்ளும் உழவர்களின் பொழுது, சரியான சமயத்தில் மழை வந்தால்தான் அது அவர்களுக்கு வாழ்க்கை எனும் பொழுது புலர்ந்த நாளாக இருக்கும். இல்லையென்றால் அது என்றும் துன்பமான கருமையான பொழுதாகவே இருக்கும்).

தரிசென சோம்பி நிலம்பாரார் வாழ்வென்றும்
ஆகிடும் பாலையே தான்

நிலத்தை உழுது மண்ணை இளக்கப்படுத்தி விவசாயத்துக்கு தயார் படுத்தாமல் வேலை செய்ய சோம்பல் கொண்டு நிலத்தில் எதுவும் செய்யாது தரிசாக வைத்திருப்பவனின் வாழ்க்கை செழித்து நிற்கும் வயல் நிலத்தைப் போல் ஆகாது. நிலத்தைப் போல் அவர்களது வாழ்வு விரைவில் பாலையாகும்.

வேண்டும் இனியோர் பிறவி அதிலும்
உயர்த்திட வேண்டும் வரப்பு



உலகில் நான் எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனை பிறவியிலும் பயிர்த்தொழில் செய்பவனாகவே பிறந்திட வேண்டும். அப்படி பிறந்து, ஏதாவது ஒருவகையில் நீர் வளத்தை பெருக்கி அதன் உயரத்துக்கேற்ப வயல் வரப்பையும், வாய்க்கால் வரப்பையும் உயர்த்தி சிறு குழந்தைகள் முதற்கொண்டு வயதான ஏழைகள் வரை பசி பட்டினியால் உணவில்லாமல்சாகும்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். வரப்புயர என்று பாடிய அவ்வைப்பாட்டியின் கனவு நனவாக வேண்டும்.

மா,தென்னை காத்திடுவோம் வண்டு வருமுன்
மறப்பின்தொடரும் துயர்

வண்டுகள் வருமுன்பே மாமரங்களையும், தென்னை மரங்களையும் காத்துக்கொள்ள வேண்டும். வண்டுகள் வந்துவிட்டால் மாம்பிஞ்சுகளை குடைந்து உள்ளே சென்று மாம்பழங்களின் தரத்தினை அடியோடழித்து விடும். அதே போல் காண்டாமிருக வண்டுகள் என சொல்லப்படும் தென்னை வண்டுகள் தென்னங்குருத்துகளை பாழ்படுத்தி விடும். தென்னம் பாளைகளை தங்கள் கொடுக்குகளால் வெட்டி அதிலிருந்து விவசாயிக்கு கிடைக்கவேண்டிய தேங்காய், இளநீர் மகசூலை அழித்து ஒழித்துவிடும்.

இந்த மா, தென்னை மரங்களை வண்டுகளிடமிருந்து தனிக்கவனம் எடுத்து காக்கவேண்டும். இல்லாவிட்டால் வருடம் முழுதும் கஷ்டப்பட்டும் ஒரு பிரயோசனமும் இருக்காது.

உழவுக் கணிகலன் ஊடுபயிர் கொல்தல்
அதின்றேல் அனைத்துமே வீண்

பயிர்களுக்குள் ஊடாக விளையும் களைப்பயிர்களையும், களைச் செடிகளையும் அகற்றுவதே உழவுக்கும் விவசாயத்தொழில் செய்யும் உழவனுக்கும் அணிகலன். அப்படி களைகளை அகற்றாமல் விட்டுவிட்டால் நாற்றுகளுக்கு செல்லவேண்டிய சத்துகளை இவை உறிஞ்சி வேகமாக வளர்ந்து பயிர்களை அடியோடழித்து விளைச்சலை கெடுத்துவிடும். அதனால் களைகளையும், வேண்டா ஊடுபயிர்களையும் அழித்து அகற்றி உணவுப்பயிர்கள் விளைச்சல் தர வழிவகை செய்யவேண்டும். அப்படி செய்யாவிட்டால் எல்லாமே வீணாகிப் போய், களைகளே பயிர்களை மேய்ந்து விட்டது என்று கையைப் பிசைந்து மீண்டும் ஒரு முறை கடன் வாங்கி பயிரிட வேண்டியதுதான். அது நேராமல் இருக்க களைகள் மண்ணிலிருந்து வெளிவரும்போதே அழித்துவிடவேண்டும்.

இயற்கை உரமிலாது ஒன்றிலை பூமகள்
இன்மனம் காணும் வழி

இயற்கை உரங்களுக்கு இணையானது உலகில் எதுவுமில்லை. இயற்கை உரங்களின்றி மண்மகளின் மகிழ்ச்சியான மனத்தை காண முடியாது. மண்ணின் மகிழ்ச்சியைக் காண ஒரே வழி இயற்கை உரங்களை உபயோகப்படுத்துவதே. இயற்கை உரங்கள் எந்த கெடுதலும் ஏற்படுத்தாமல் பயிர்களுக்கு இயற்கையான முறையில் செழிப்பை தந்து விளைச்சலை தந்து அதை உண்ணும் நமக்கும் எந்த ஒரு பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாத உன்னதம். மண்ணை மட்டுமல்ல இந்த இயற்கை உரங்கள் மனிதனையும் ஆரோக்கியமாக இருக்கவைக்கும் வல்லமை கொண்டது.

வற்றிடும் கேணிநீர் காண அழும்நெஞ்சம்
வற்றியபின் வாழுமோ வாழ்வு

கிணற்று நீர் நாளுக்குநாள் வற்றி வருவதைப் பார்த்து கண்ணீரும் வற்றிப்போக அழும் உழவன் நெஞ்சம், அந்த கிணற்றுநீர் முழுதும் வற்றிப் போனால் அத்தோடு அவன் வாழ்வும் முடிந்துபோகும். பிறதொழில் ஏதாவது தேடவேண்டிய நிலை வரும். படித்திருந்தால் ஓரளவாவது பிழைக்கலாம். அதுவும் கல்வியறிவு இல்லாத உழவன் நிலை என்றால் தற்கொலை செய்து குடும்பமாக உயிர்மாய்க்கும் அதோ கதிதான்.

மண்வெட்டி பார்த்து மடையை திறப்பின்
பயிர்க்கும் உயிருக்கும் நன்று

மண்வெட்டியின் பிடியையும் அதன் உலோகத்தாலான மண்ணெடுக்கும் அடிப்பாகத்தையும் ஒரு முறை உற்றுப் பார்த்தபின் மடையைத் திறக்கவேண்டும். அப்படி எதையும் பார்க்காது சட் சட் என்று மடையைத் திறந்திட முயன்றால் ஒருவேளை உடைந்த நிலையில் இருக்கும் அதன் உலோக அடிப்பாகம் மடையைத் திறக்க முனையும் போது நம் மண்டையை தாக்கலாம். மரத்தாலான கைப்பிடி கழன்று காயப்படுத்தி, இரத்த இழப்பையும் ஏற்படுத்தலாம். இந்த சூழ்நிலையில் சரியாக வெட்டப்படாத மடை நீர் , பாய்ந்த வயலுக்கே பாய்ந்து பயிர்களை அழுகச்செய்துவிடும். ஆகவே மண்வெட்டியின் பிடி, அடி பார்த்து மடை திறந்தால் பயிர்களுக்கும். உழவனின் உயிருக்கும் நல்லது

எந்த உழைப்பானாலும் சரி அதை 100 மடங்கு மரியாதையோடு நேசித்து செய்வோம். அது நிச்சயம் நம்மை உயர்த்தும்.

உழைப்போம் உயர்வோம். நாட்டை வளப்படுத்துவோம்.

# இந்தியா- அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம்: ஜூலை 8ல் அறிவிக்க வாய்ப்பு



இந்தியா- அமெரிக்கா இடையே மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இது குறித்து ஜூலை 8ல் அறிவிக்க வாய்ப்பு உள்ளது. சமீப காலமாக, இந்தியாவுடனான பணிகளில் ஒரு பெரிய வர்த்தக ஒப்பந்தம் குறித்து, அதிபர் டிரம்ப் பலமுறை சூசகமாக குறிப்பிட்டு பேசி வருகிறார். சமீபத்தில், "இந்தியாவுடன் மிகப்பெரிய ஒப்பந்தத்தை மேற்கொள்ள உள்ளோம். தற்போது சீனாவில் இருந்து ஒப்பந்தத்தை தொடங்கியுள்ளோம்.

முதல்வர் பதவிக்கு போடப்பட்ட ஒப்பந்தம் சிவகுமார் ஆதரவு எம்.எல்.ஏ., மனம் திறப்பு

நாங்கள் அனைத்து நாடுகளிடமும் ஒப்பந்தம் செய்ய மாட்டோம். சிலருக்கு நன்றி தெரிவித்து கடிதம் அனுப்புவோம்'' என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியிருந்தார். இந்நிலையில், பேச்சுவார்த்தைகளை இறுதி செய்வதற்காக, வர்த்தகத் துறையின் சிறப்பு செயலாளர் ராஜேஷ் அகர்வால் தலைமையிலான இந்தியக்குழு வாஷிங்டனுக்கு சென்றுள்ளது.

இந்தியா- அமெரிக்கா இடையே மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இது குறித்து ஜூலை 8ல் அறிவிக்க வாய்ப்பு உள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது.

"உலகெங்கிலும் உள்ள நாடுகள் மீது பரஸ்பர வரிகளை விதிப்பதற்கான டிரம்ப்பின் காலக்கெடு ஜூலை 9ம் தேதியுடன் முடிவடைவதால், இந்த ஒப்பந்தம் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட உள்ளது'' என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தனர். (ஐ)

## ஈரான் போர் வெற்றிக்குப் பிறகு சாதகமான வாய்ப்புகள் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



ஈரானுக்கு எதிரான போரில் அடைந்த வெற்றிக்குப் பிறகு, பிணைக்கைதிகளை மீட்பது உள்ளிட்ட பல்வேறு வாய்ப்புகள் இஸ்ரேலுக்கு உருவாகியுள்ளதாக அந்நாட்டு பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்–ஹமாஸ் இடையே கடந்த 2023ம் ஆண்டு முதல் மோதல் இருந்து வருகிறது. இதில் பாலஸ்தீனர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர். இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், அதில் ஒப்பந்தத்தை மதிக்கவில்லை என இரு தரப்பிலும் குற்றம்சாட்டப்பட்டது. இதனையடுத்து மீண்டும் போர் துவங்கி நடந்து வருகிறது. தற்போது வரையில் 56 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

ஹமாஸ் பயங்கரவாதிகளை மொத்தமாக அழிக்கும் வரையில் போர் நிறுத்தம் கிடையாது என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியிருந்தார். ஆனால், காசாவுடன் போர் ஒப்பந்தம் மேற்கொண்டு, பிணைக்கைதிகளை மீட்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கோரிக்கை விடுத்து வருகிறார். மேலும், 60 நாட்கள் போர் நிறுத்தம் செய்யவும், உயிருடன் இருக்கும் பிணைக்கைதிகள் மற்றும் கொல்லப்பட்ட இஸ்ரேலியர்களின் உடல்களை வாங்கும் ஒப்பந்தத்தை அமெரிக்கா முன்மொழிந்தது.

இந்த நிலையில், ஈரானுக்கு எதிரான போரில் அடைந்த வெற்றிக்குப் பிறகு, இஸ்ரேலுக்கு ஏராளமான வாய்ப்புகள் உருவாகியுள்ளதாக அந்நாட்டு பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

நேற்று இஸ்ரேலின் ஷின் பெட் பாதுகாப்பு முகமையை பார்வையிட்ட போது அவர் கூறியதாவது ஈரானுக்கு எதிரான போரில் அடைந்த வெற்றிக்கு பிறகு, காசாவில் சிறைபிடிக்கப்பட்டுள்ள பிணைக் கைதிகளை மீட்பதற்கான பல வாய்ப்புகள் உருவாகியுள்ளன. ஆப்ரகாம் ஒப்பந்தம் (அமைதி ஒப்பந்தம்) விரிவுபடுத்தவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. காசா பிரச்சினையையும் தீர்க்க வேண்டும். ஹமாஸை வீழ்த்த வேண்டும். இந்த இரு பணிகளையும் சிறப்பாக செய்து முடிப்போம், எனக் கூறினார். (ஐ)

# சண்டை முடிந்தது சமாதானம் பிறந்தது: எலான் மஸ்க் சிறந்த மனிதர் அதிபர் டிரம்ப்



எலான் மஸ்க் எதிர்ப்பு தெரிவித்த மசோதா, செனட்டில் நிறைவேறி உள்ளது. இது தொடர்பாக நிருபர்கள் கேள்விக்கு, "எலான் மஸ்க் சிறந்த மனிதர். அவர் சிறப்பாக செயல்பட கூடியவர்'' என டிரம்ப் பதில் அளித்தார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் வரி குறைப்பு, அமெரிக்க அரசின் கடன் உச்சவரம்பை அதிகப்படுத்துவதற்காக 'பெரிய அழகான வரி' என்ற பெயரில் கொண்டு வந்த மசோதா நேற்று செனட்டில் விவாதம் மற்றும் திருத்தங்களுக்கு அனுமதிக்கும் நடைமுறை ஓட்டெடுப்பில் இரு ஓட்டுகளில் தேர்வானது.

இந்த மசோதாவுக்கு தான் தொழிலதிபர் எலான் மஸ்க் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

எலான் மஸ்க் அமெரிக்க அதிபரின் நெருங்கிய ஆலோசகராக கடந்த மே மாதம் பணியாற்றினார். பின்னர் அவரது பதவிக்காலம் முடிந்தது. இந்நிலையில், எலான் மஸ்க் எதிர்ப்பு தெரிவித்த 'பெரிய அழகான வரி' மசோதா செனட்டில் நிறைவேறியது குறித்து டிரம்ப் கூறியதாவது: எலான் மஸ்க் ஒரு அற்புதமான மனிதர் என்று நான் நினைக்கிறேன். நான் அவருடன் அதிகம் பேசியதில்லை, ஆனால் அவர் எப்போதும் நன்றாகச் செயல்படுவார் என்பது எனக்குத் தெரியும். அவர் ஒரு புத்திசாலி. அவர் உண்மையில் என்னுடன் பிரசாரம் செய்து, இதையும் அதையும் செய்தார். ஆனால் அவர் கொஞ்சம் வருத்தப்பட்டார், அது பொருத்தமானதல்ல. இவ்வாறு டிரம்ப் கூறினார்.

மசோதாவுக்கு மஸ்க் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் டிரம்புக்கும் அவருக்கும் கடும் மோதல் ஏற்பட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் திட்டி தீர்த்தனர். மஸ்க் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அரசு ஒப்பந்தங்களை ரத்து செய்யப் போவதாக அதிபர் மிரட்டலும் விடுத்தார். பின்னர் மஸ்க் வருத்தம் தெரிவித்ததை தொடர்ந்து பிரச்னை முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சூடானில் தங்கச் சுரங்கம் இடிந்து விபத்து: தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழந்த சோகம்



சூடானில் தங்கச் சுரங்கம் இடிந்து விபத்து ஏற்பட்டதில், தொழிலாளர்கள் 11 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

வடக்கு ஆப்ரிக்க நாடான சூடானின், கிழக்கு நைல் நதி மாகாணத்தில் உள்ள கெர்ஷ் அல்பீல் தங்கச் சுரங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் வழக்கம்போல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ராஜஸ்தானில் சோகம் மண் சரிந்து விழுந்ததில் தொழிலாளர் 4 பேர் பலி 5 பேர் மாயம்

அப்போது அந்தச் சுரங்கம் திடீரென இடிந்து விழுந்தது. இதில், ஏராளமான தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதைந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு படையினர் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்டனர்.

இந்த விபத்தில் 11 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 7 பேர் பலத்த காயத்துடன் மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்த விபத்து சம்பவம் சூடானில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. அங்கு தரமற்ற பாதுகாப்பு நடைமுறைகளால் அடிக்கடி விபத்துகள் நடந்து வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதேபோன்ற சம்பவங்களில் 2023ம் ஆண்டு 14 சுரங்கத் தொழிலாளர்களும், 2021ம் ஆண்டு 38 சுரங்க தொழிலாளர்களும் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நெடுந்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தவிசாளர் பதவிக்காக இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் முன்மொழியப்பட்ட சங்கரப்பிள்ளை சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் முன்மொழியப்பட்ட செபஸ்ரியன் விமலதாஸ் தெரிவானார்.

13 உறுப்பினர்களை கொண்ட நெடுந்தீவு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 6 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 4 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி இரண்டு ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தது.

## ஆரையம்பதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் துயரச் சம்பவம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆரையம்பதி, முதலாம் பிரிவு, காளிகோவில் வீதியைச் சேர்ந்த பிரகாஷ் றிகோஸ்வரன் (வயது 3) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது

சடலத்தை ஆரையம்பதி வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், பஸ் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிங்கள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கில் 25 ஆயிரம் வரையிலான சிங்களக் குடும்பங்கள் இருந்தன. இன்று ஒருவர்கூட இல்லை. மட்டக்களப்பிலும் சிங்களவர்கள் இல்லை.

கொழும்பில் முஸ்லிம் மற்றும் தமிழர்களே வர்த்தகத்தை நிர்ணயிக்கின்றனர். இதற்குச் சிங்களவர்கள் தடை ஏற்படுத்துவதில்லை. நிலைமை இப்படி இருந்தும் சிங்களவர்களுக்கே இனவாத முத்திரைக் குத்தப்படுகின்றது.

அதிகாரத்துக்காகத் தற்போதைய அரசு பெரும்பான்மை இனத்தைக் காட்டிக்கொடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இராணுவ அமைப்பு மற்றும் தேசியவாத அமைப்புகளுடன் சந்திப்பு நடத்தவில்லை. தமிழ்ப் பிரவினைவாதிகளை மட்டுமே சந்தித்தார். இரு தரப்புகள் இருப்பதை அரசு அவருக்குச் சுட்டிக்காட்டி இருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை." - என்றார்.

# மரத்துடன் மோதியது பஸ்! மூவர் வைத்தியசாலையில்!!



மட்டக்களப்பு, ஜூன் 30

கதிர்காமத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ், வேகக் கட்டுப்பாட்டை இழந்து மட்டக்களப்பு - கிரான்குளத்தில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமத்தில் இருந்து மட்டக்களப்புக்கு விசேட போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் குறித்த பஸ், கதிர்காமத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி, கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை சென்றவர்களை ஏற்றிக்கொண்டு பயணித்தது. இந்நிலையில், கல்முனை - மட்டக்களப்பு வீதியிலுள்ள கிரான்குளம் தபால் கந்தோருக்கு அருகாமையில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ், வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஷிராந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெரமுன கட்சி முற்றாக நிராகரித்துள்ளது.

"இது முற்றிலும் போலியான தகவலாகும். ஆளுங்கட்சியால் திட்டமிட்ட அடிப்படையில் பரப்படும் வதந்தியாகும்." - என்று மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

## வவுனியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாநகர மேயர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த அமர்வில் துணை மேயர் ப.கார்த்தீபன், மாநகர ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மாநகர சபையின் முதலாவது அமர்வில் செங்கோல் சகிதம் மேயர் சபை மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டு அமர்வு ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமர்வில் குழுக்கள் அமைப்பு மற்றும் வவுனியா மாநகரில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

# ஹங்குரன்கெத்த பிரதேச சபையிலும் ஆட்சியமைத்தது தேசிய மக்கள் சக்தி

ஹங்குரன்கெத்த, ஜூன் 30

ஹங்குரன்கெத்த பிரதேச சபையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு, மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எம்.கே.சி.கே அத்தபத்துவின் தலைமையில் இன்று ஹங்குரன்கெத்த பிரதேச சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பகிரங்க வாக்கெடுப்பின் ஊடாக ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஜயசேகர முதியன்சேலாகே அராவே தெதர லயனல் குணரத்ன தெரிவானார்.

அதையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் இராமையா ருசன்ஸ்குமார் 22 வாக்குகளைப் பெற்று உப தவிசாளரானார்.

ஹங்குரன்கெத்த பிரதேச சபைக்காக 42 உறுப்பினர்கள் தேர்வாகி சபை உறுப்பினர் அங்கீகாரம் பெற்றுள்ளனர்.

ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் உறுப்பினர் பங்கீட்டு விவரம் வருமாறு:-

- தேசிய மக்கள் சக்தி - 20
- இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - 2
- ஐக்கிய தேசியக் கட்சி - 3
- பொதுஜன ஐக்கிய முன்னனி - 1
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 4
- ஐக்கிய மக்கள் சக்தி - 9
- சர்வஜன அதிகாரம் - 1
- சுயாதீனக்குழு 1 - 1
- சுயாதீனக்குழு 2 - 1

# வவுனியாவில் இன்று வீடு ஒன்றில் தீ விபத்து



வவுனியா, ஜூன் 30


வவுனியா, பண்டாரிக்குளத்தில் உள்ள வீடு ஒன்றில் தீ பற்றிய சம்பவம் பதிவாகியுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். இன்று காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் சாமி அறையில் விளக்கு ஏற்றுவதற்காகத் தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக தவறுதலாகப் பெற்றோலைப் பயன்படுத்தியமையாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

அந்த வீட்டார் இது தொடர்பாக வவுனியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவித்த நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் பகுதியினர் பொதுமக்களின் உதவியுடன் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பெற்றோல் தட்டுப்பாடு ஏற்படும் எனக் கருதி சாமி அறைக்குள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெற்றோலையே மாறி தேங்காய் எண்ணெய் என நினைத்து வீட்டார் பயன்படுத்தியுள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# புதிய அலை கலை வட்ட இளைஞர் அணியின் ஹைக்கூ கவியரங்கம்




கொழும்பு, ஜூன் 30

புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணி மாதாந்தம் நடத்தத் திட்டமிட்டுள்ள ஹைக்கூ கவியரங்கத்தின் இரண்டாவது அமர்வு எதிர்வரும் 13ஆம் திகதி மாலை 4.30 மணிக்குக் கொழும்பு - 13, புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள எக்ஸலனஸ் சர்வதேச பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கவியமர்வுக்கு ஆசிரியரும் கவிஞருமான எஸ்.அழகேஸ்வரன் தலைமை ஏற்கின்றார்.

இதில் இணைந்து கொண்டு ஹைக்கூ கவிதை பாட விரும்புவோர் அன்றைய தினம் நேரில் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் புதிய அலை கலை வட்டத்தின் இளைஞர் அணியின் தலைவர் ஷெ ரோனுடன் 0751670825 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா!

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் இலங்கையில் வழங்கப்பட்டுவரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் விழா நேற்றையதினம் (29) யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல்பாதுகாப்புச் செயற்பாடுகளில் பங்கேற்பாளர்களாக்கும் நோக்குடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது.

அதன்படி இந்த ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த முதல் 250 மாணவர்களுக்கு பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவிக்கு ஒரு பவுண் எடையுள்ள தங்கப் பதக்கமும், இரண்டாம் இடத்தைப் பெற்ற யா. மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிவிழி சுதாஜி என்பவருக்கு வெள்ளிப் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மூன்றாம் இடத்தைப் பெற்ற மட்டக்களப்பு வின்சற் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த டிலுக்சினி டன்ஸ்ரன், மன்னார் சேவியர் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நித்திக்கா அன்ரன் பிலிப்ஸ், யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் ஆகிய மூவருக்கும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை இம்முறை பாக்கியநாதன் சசிக்குமார், பாக்கியநாதன் ராஜ்குமார் ஆகிய இருவரும் பெற்றிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் இலங்கையில் வழங்கப்பட்டுவரும் சூழல்சார் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அமைதி விருதுகள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த முன்னிலை விருதுகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2025 வெளியிடப்பெற்றது.